செய்தி வெளியீடு எண்.116 நாள் 24.02.2017

# திருவள்ளூர் மாவட்டம் அம்பத்தூர் வட்டம் ஜெ.ஜெ.நகர் (மேற்கு) பேருந்து நிலையத்தில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்தின் சார்பாக தமிழக அரசின் சாதனைகள், திட்டங்களை விளக்கும் சிறப்பு புகைப்படக் கண்காட்சியை மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்கள் திறந்து வைத்தார்.

------------

திருவள்ளூர் மாவட்டம் அம்பத்தூர் வட்டம் ஜெ.ஜெ.நகர் (மேற்கு) பேருந்து நிலையத்தில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்தின் சார்பாக தமிழக அரசின் சாதனைகள், திட்டங்களை விளக்கும் சிறப்பு புகைப்படக் கண்காட்சியை மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்கள் இன்று (24.02.2017) மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் திறந்து வைத்து பார்வையிட்டார்.

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்ட பின், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அதிநவீன மின்னனு விளம்பர வீடியோ வாகனம் மூலம் அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை விளக்கும் வீடியோ படக்காட்சியை பொதுமக்களுடன் பார்வையிட்டார்கள்.

இப்புகைப்பட கண்காட்சி 24.02.2017 மற்றும் 25.02.2017 ஆகிய இரு நாட்கள் காலை 10 மணி முதல் மாலை 5 வரை நடைபெறும். பொதுமக்கள் அனைவரும் திரளாக வந்து அரசின் சாதனை மற்றும் திட்டங்களை பற்றி தெரிந்து கொள்ளலாம்.

இந்நிகழ்ச்சியில் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.அலெக்ஸாண்டர், அம்பத்தூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.வீ.வீரப்பன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.தனபால், அம்பத்தூர் வட்டாட்சியர் திருமதி.கலைச்செல்வி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**